உ

தேவி துணை.



தெப்பக்குள் ஒயிற் கும்மி.

இஃது

புதுக்கோட்டை சமஸ்தானம் திருமயந் தாலூகாவைச்
சேர்ந்த கீழப்பட்டிமாநகரம்,

ம-া-া-ஸ்ரீ வீரப்பன்சேர்வைகாரர்

அவர்கள் பரோபகாரார்த்தமாய் தயாளசித்தத்துடன்
உண்டாக்கிய தெப்பக்குளத்தின் மகிமையறிந்த

ம-া-া-ஸ்ரீ இராமசாமி சேர்வைகாரர்

அவர்கள் விருப்பத்தின்படி,

தெ. முத்துக்குமாரசாமியாபிள்ளையால்

இயற்றப்பட்டு,

கொழும்பு, நடராஜ அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

துரோதிவருடம் சிம்மரவி ௧-௰.

R.M. Sethuraman chetty
Rayavaram

சாற்றுகவிகள்.

திருநெல்வேலி இன்னிசைவித்வான்

ம-ள-ள-ஸ்ரீ. சுப்பிரமணியபிள்ளை அவர்கள்

இயற்றியது.

——:0:——

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மறைமிக வளர்ந்தோங்கு குலசேகரனாசு
வாய்ந்த தெக்ஷணகாசியிற்
மன்னுதவ மேற்கொள்பல கவிஞர்களையீன்றருள்
வயித்தியநன் னுதனுக்கு
இறைபலரு மெச்சுமுத்துக்குமாரசுவாமி
எழில்சோதிடத் திறமுளான்
எண்ணுதற்கரிதான பரதபண்டிதமுடன்
இயல்மந்திர ஜாலசீலன்
நிறைவள மிகுத்த கீழப்பட்டி நகரினிற்
நிலைத்தரச னெனவதித்த
நேயமிகு வீரப்பதிரேந்திரன்மீது
நிகழ்த்தினன் கும்மிமழைபோல்
பறையஷ்ட லெக்ஷிமி கடாக்ஷமிக மேலோங்கி
பாலர்கள் மிகப்பெருகியே,
பற்றுகவிஞர்க்குதவு வீரப்பதிரனும்
பதிவளர்ந்தோங்கமாதோ.

யாழ்ப்பாணம்,

ம-ா-ா-ஸ்ரீ. அருணாசலக்கவிராயரவர்கள்

இயற்றியது.

———:o:———

ஆசிரிய விருத்தம்.

பூமேவு கதிரைவிரி மறைகமழு பொய்கைசூழ்
புலவுதென் காசிநகர்வாழ்
புகழுறு வயித்தியநாதப்பிள்ளை செய்தவப்
புத்திர சிரோன்மணியனும்
பாமேவு முத்துக்குமாரசுவாமிக் கவிஞன்
பறைபத முணர்ந்தசீலன்
பகடுகீழப்பட்டி நகரினுக் கிறையான
பார்த்திப னெனப்புகழுறும்
மாமேவு வீரப்ப தீரன்மேற் கும்மியை
வழங்கினன் பொழிமாரிபோல்
வருமினிப் புற்றிதை நாமிதற் கிணையிலென
மனநொந் தமிழ்த்தமன்றே
நாமேவு புலவருக் கமிழ்தென வளர்ந்தோங்கு
நளினவீரப்பதுரையும்
நாடுபல நிதியோங்கி கதியோங்கி யெந்நாளும்
நலமுற்று வாழ்கமாதோ.

உ

தேவிதுணை.

தெப்பக்குள வொயிற் கும்மி.

ஸ்தோத்திரம்.

வெண்பா.

வெற்றிக் கணபதியும் வேலோன் சரஸ்பதியும்
சத்தி சிவன்பதத்தைத் தான்பணிந்து--பக்தி
முதிர் வீரப்பன்னரத்தை முன்னறிந்து கும்மிசொல
கதிர் வேலப்பன் கழலேகாப்பு.

விருத்தம்.

திருமருவு புதுக்கோட்டை சமஸ்தானத்திற்
திருமயந் தாலுகாவிற் சிறப்புற்றோங்கும்
இருநிதியந் தழைத்தபதி கீழப்பட்டி
யெனுநகரி லாசர்குல திலகனான
தருவெனுநற் கொடையுடைய வப்பன்சேர்வை
தன்றவத்திற் றோன்றுகுல சீலனாகும்
மருகமழுந் திருவீரப்பன் மேற்கும்மி
வழங்கிட நாமகள் வாக்கில் வழங்குவாளே.

நான்முகம்.

ஒயிற் கும்மி.

சீர்நிறைந் தென்றுஞ் சிறப்புறும் வீரப்பச்
செல்வன்மேற் கும்மித் திறம்பாட
தேவர்க்குமுன் மூவர்க்குமற்
றேவர்க்குமுன் னாகுந்திரு
சித்திவிநாயகன் காப்பாமே. என்று
நத்திவரும்வினை தீர்ப்பாமே. (க)

ராவணன்கொண்ட வரத்தையழித்திட
நற்சிறுவேதியனாய்த்தோன்றும்
நாதன்றிற சூதன்னுப
வீதன்சுக நீதனும்
நற்குணநாத னடியிணையாம். மறை
சொற்கணநாத னடிதொழுவாம். (௨)

கம்பர்க்கு காலின் சதங்கை கிலுக்கும்
கருங்குழன்வாணி பதம்பணிந்து
காதற்றரு சீதப்பிறை
கோதிப்புனை வேதத்துறு
கன்னியின்றாட்டுணை காப்பாமே. பாதம்
சென்னியிற் றாங்கிடச் சேர்ப்பாமே. (௩)

எண்ணுமெழுத்து மிலக்கியமோர்ந்து
இருஞ்சபையேறும் புலவரைப்போல்
நண்ணுங்கவி கண்ணும்பரு
வெண்ணும்மறி யொண்ணுதடி
யேனுங் கவிசொலத் தான்றுணிந்தேன். புல
வீனுங்கவிஞரின் றாள்பணிந்தே. (௪)

தென்னிந்தியாப் புதுக்கோட்டை ராஜாங்கம்
திருமயந் தாலூகாவின்னருகே
செங்காவி யுறும்வாவிகள்
சிங்கார முறும்கோவிலும்
செந்நெற்கழனி செழித்தபதி. முத்து
கன்னல்மிகுங் கீழப்பட்டிதனில். (௫)

உற்றநகரிற் றிருநிறைந்தோங்கு
முடையப்பன் சேருவைகாரரென்போர்
உலகத்தினில் நலமிக்குள
கலனுற்றிடு குலகர்புள
ஓங்குகுலத்து மின்னம்மைதனை. கற்பு
தாங்குந்திறத்து வன்னம்மைதனை. (௬)

அக்கினிசாக்ஷியாய் கைபிடித்தேநீங்கா
அன்றிலம் பேடென வாழுமன்னாள்
அருளைத்தரு திருவொற்றிடு
தருமச்சுதர் கருவுற்றிட
ஆற்றற்கரிய தவம்புரிந்தார். அதை
சாற்றற்கரிதென் மனந்தெளிந்தே. (எ)

சின்னண்ணன் பட்டவனென்றே சொலுங்குல
தேவதை வீரயிலக்ஷுமியும்
தேறற்றவ மேலுற்றிடு
வீரத்தன மேயுற்றதை
சேய்களுண்டாக வருள்புரிந்தார். அன்னத்
தாயுமேகண்டு மனங்குளிர்ந்தார் (அ)

எரியுடையதோர் சாஸ்திரவுமெங்கள்
ஈஸ்பரியாமொன்றை யம்மாளும்
இயல்பிக்குள வுலகத்தினில்
செயலைப்புரி நிலைபெற்றிடு
எட்டுக்கட்டங்கா பரியுடையான். அய்யன்
கோட்டைக்கறுப்பையா சீருடையான். (கூ)

இத்தகைமேவுந் தலத்துறைதேவதைக்
கேற்றதிருவிழாத் தானளித்தே
எங்கும்புகழ் தங்குங்குடி
பொங்குஞ்சுத சிங்கேறென
எற்றபுதல்வர் பெருகவரம். மிகு
நேற்றியதாய் கொண்டுவாழ்ந்திருந்தார். (க0)

தன்குலமோங்கத் தழைத்தபுதல்வரில்
தான்முதற் றோன்றுந்தனபதிக்கு
தக்கன்றனை ஒக்கப்புடை
மிக்கபுகழ் கக்கும்பெயர்
தாங்கும் வீரப்பனென்றே யழைத்தார். தம்பிக்
கோங்குநாராயணனென்றுரைத்தார். (கக)

பாரோர்புகழும் பரதரும் ராமரும்
பண்பிற்சிறந்திடும் பாவனைபோல்
பலர்மெச்சிட கலைமுற்றிலும்
நிலையுற்றுமே விலைபெற்றிட
பாங்குடனோதி யுணர்ந்தனரே. பெற்றோர்
ஓங்கு மகிட்சி சிறந்தனரே. (கஉ)

கன்னியர்கண்டு மயங்கும் புதினாறு
காளைப்பருவம் பொருந்திடலும்
காதல்மிகு மாதர்களை
வேதம்முறை நீதப்படி
கண்டுமணத்தை முடிக்கலுற்றார். இதை
விண்டுபலரும் படிக்கலுற்றார். (கங)

செல்வமிகுத்த திருவீரப்பேந்திரன்
செய்தவஞ்சேர்ந்து திரண்டதுபோல்
செயல்மிக்குள மயிலைத்தரு
நயனத்திரு வதனத்தவள்
செப்புஞ்சியனாயி யம்மைதனை. தேவர்
ஒப்பும்படி கைபிடித்தனரே. (சக)

பூவுடன் வாசம் பொருந்திய தன்மைபோல்
பூவுலகத்தோர் வியப்புறவே
பொங்குந்திரு வெங்குந்நிறை
சங்கம்புனை எங்கோனருள்
போற்றுந்தவத்தின் றிறமதனால். கரு
வேற்றுக் கருப்பந் தருகியதே. (கரு)

பத்துமதியு நிறைந்துகுருவமே
பாக்கியம்பெற்று நற்கோணமுற
பாலன்குல சீலன்றிரு
வேலன்மத லோலன்யென
பாலகன் றோன்றியளர்ந்தனனே. பெற்ற
சீலன் மனமுங்குளிர்ந்தனனே. (கசு)

சாஸ்திரங்கண்டு சடங்குசெய்வோருக்கு
தக்கசம்பாவனை தானமிட்டே
சந்தோஷமிகுந்தேறிட
தந்தாய் மனமுந்தேறிட
சந்தனதாம்பூலஞ் சக்கரையும் வரு
மந்தணர்பெற்று வரமளித்தார். (கஎ)

வள்ளிமணாள னருளால்கிடைத்த
வளந்தருபுத்திரன் றணவர்க்கு
வைத்தார்பெயர் பெற்றோரதை
யுற்றேமன மொற்றே புகழ்
வாகைக் குழந்தைவே லென்றுரைத்தார். சங்க
ரேகைபொருந்திடு நன்கரத்தால். (கஅ)

இத்தகைபெற்றநம் வீரப்பதிரனும்
இந்திரபோகச் சுகமடைந்தே
ஈடின்றியே பாடுங்கவி
யோடொன்றியே நீடுங்கொடை
யார்க்குமளித்தவர் வாழ்ந்திருந்தார். சுக
மேற்குமனையவர் சூழ்ந்திருந்தார். (க௯)

நற்குணத்தம்பி யென்னாராயணசுவாமி
நாடியபெண்களில் யோகமுள்ளாள்
நற்புத்தி யினிற்கற்புள
வெற்பொற்ற புயத்தைப்பெரு
நங்கைவீரம்மாளைத் தான்மணந்து. மண
மங்கையுந்தானு மனமகிழ்ந்து. (உ0)

தெய்வகிருபை மிகுத்தகுலத்துள்
சீரதனா லொருபுத்திரனை
ஜெகமெய்த்திட நயமுற்றிடு
வயமிக்குறு புயலொற்றிடு
செல்வப்புதல்வன் சிதம்பரத்தை. பெற்று
இல்லிற்சுகமுடன் வாழ்ந்திருந்தார். (உக)

உடையப்பன்சேருவை செய்ததவத்தினல்
உற்றசுதன் வீரப்பேந்திரனும்
உலகத்தினிற் பலகற்பினும்
நலமிக்குள கலனைத்தரு
ஓங்குந்திரவியக் கட்டிருப்பின் நலம்
ஈங்குபெருகு மெனநினைத்தார். (உஉ)

திரைகடலோடிந் திரவியந்தேடுதல்
செவ்வையென் றவ்வையுஞ் செப்பியதால்
சேரும்நிதி யேறும்பதி
யாரும்மதி நீறுந்துதி
இலங்கைப்பதியை யடுத்துகந்தார் தன
மங்கையும் கூடந்தொடுத்துவந்தார். (உ௩)

என்றைக்கும்வீரிய லெக்ஷிமிகூட
விருக்கும் பெரிய தவப்பலனல்
எங்கும்புகழ் பொங்கும்பதி
சிங்கேறெனை தங்குந்துரை
ஏற்றநடுத்தோட்ட காவலனும். புகழ்
தூற்றுங்கங்கானிப் பட்டங் கொடுத்தார். (உ௪)

ஏற்றும் பெரிய கங்காணிப்பட்டம்பெற்று
எண்ணிடிலேம்பது கங்காணியும்
எத்திக்கினும் வெற்றிப்புனை
பத்திக்கினி துற்றேவரும்
ஏறுஞ்சிம்மேறென வீரமுள்ளார். நல
மீறும்படிக்கதி காரமுள்ளார். (உ௫)

வெத்திக்கிறையெங்கள் வீரப்பதீரனும்
வேலைத்தலத்தினுக் கேகையிலே
வேலைப்புனை பாலர்க்கொரு
காலத்தினில் சூரைப்பட
வெங்கடுஞ்சேனை நடந்ததுபோல் சுற்றி
லுங்கூலிகாவலர் சூழ்ந்துவர. (உ௬)

நடுத்தோட்டத்துப் பெரியகங்காணியின்
நாமத்தைச்சொல்லின் துரைமார்கள்.
நயமுற்ற சலாமிச்சமாய்
அவையத்தினில் பலர்மெச்சிட
நாடும் ஷேக்கான்கள் கொடுப்பார்கள். மிக
தேடுங்குறிச்சியிடுவார்கள். (உஎ)

திருவாய்திறந்து பெரியகங்காணியார்
தேவைபணமென்று சொல்லுமுன்னே
சீராயுறு மோராயிரம்
மீராயிர மூவாயிரம்
தேவைக்குச்செக்கைக் கிழித்திடுவார் இதை
யாவருங்கண்டு மதித்திடுவார். (உஅ)

இலங்கைத்தீவுள்ள தோட்டவழக்குகள்
எற்றகங்காணியார் தீர்க்கையிலே
எள்ளுக்காய் முள்ளும்முனே
ஈர்ந்தப்படி யோர்ந்திப்படி
எங்கும்புகழ வழக்குரைப்பார் இதை
யங்கங்குகூடிப் புகழுரைப்பார். (உகூ)

இம்மிக்கணக்கினை யீர்ந்தெழுதுங்கடை
யேட்டுச்செட்டிப்பிள்ளைமாருகளும்
எழில்மிக்குள தனவந்தனும்
செழியற்றகு கனவந்தனும்
எங்கள்திருவீரப் பேந்திரர்க்கு பணம்
மங்களத்தோடு கொடுத்தழைப்பார். (௩0)

இத்தகைமேவும் திருவீரப்பேந்திரன்
எங்கெங்கும் கீர்த்திபெருகிடலும்
எங்கும்புகழ் தங்கும்நிதி
பொங்கும்படி யங்கங்குறை
ஏற்றபுலவர்கள் கூடிடுவார் வெகு
வாற்றலுடன்கவி பாடிடுவார். (௩க)

இப்புகழேறும் பெரியகங்காணியாய்
எண்ணிடிலாயிரம் கூலிகட்கும்
எத்திக்கினு முத்திப்புகழ்
சுத்திச்செல வெத்திக்கிறை
ஏற்றவீரப்ப சுரேந்திரனும் வெகு
வாற்றலுடநிதி சேர்க்கலுற்றார். (௩௨)

பாக்கியலெட்சுமி கூடவிருக்கின்ற
பண்பாற்பெரிய கங்காணியென்போர்
பாரில்நிதி யேறும்வழி
யீடின்றியே சேரும்மெழில்
பற்றுங்குபேரன்போல் வாழ்ந்திருந்தார் கவி
முற்றுமுணர்ந்தவர் சூழ்ந்திருந்தார். (௩௩)

மக்கண்மனைச் செல்வமோங்கிவளர்ந்து
வளவர்கோனைகவே வாழுமந்நாள்
மனுவிற்சொலு மிருசோடச
தருமத்தினி லெதுமேலென
வாய்த்தபுலவரெடுத் துரைப்பார் தர்ம
தீர்த்தகுளம் வெட்டலென்றுரைத்தார். (௩௪)

இம்மொழிதன்செவி கேட்டலும் வீரப்ப
இந்திரன்தாமகமேதுமின்றி
எழில்மேற்பட செழிமள்ளரை
விழியுற்றுமே பொழிநீர்தரு
ஏற்றதெப்பம்வெட்டித் தான்முடித்தார் தனக்
கேற்றதம்பி யதைச்சீர்பிடித்தார் (௩௫)

தெப்பக்குளம் வெட்டல்முக்கியமென்று
திருவீரப்பேந்திரன் கேட்டவுடன்
செய்நற்றவ முய்வித்திட
தெய்வச்செய லெய்திற்றென
தேடுந்திரவியங்கட்டினராம் மனம்
நாடும்தெப்பக்குளம் வெட்டினராம். (௩௬)

தர்மத்துக்கென்று திரவியந்தன்னை
தயாளத்துட னள்ளியீந்தவராம்
    தர்மதுரை யாம்சத்துரு
    வர்மதுரை யாம்வீரப்ப
தர்மனையாருக்கு மொப்பிடலாம்   இந்த
கர்மபூமிக்குள்ள பாலரிலாம். (௫௭)

சூரியன் தம்பியாம் சூரியன்மைந்தனை
சொல்வோமென்று வியர்க்கிடெனவே
    துணிவுற்றிடு சகுனிக்குள
    வினையத்தினால் புனைவுற்றுமே
தோன்றுது தர்மம் சிலநாளாய்   இவர்க்
கேன்றுன்றவறிடும் எந்நாளும். (௫அ)

செப்புஞ்சீதக்காலி தன்னையியர்க்கிணை
சேர்க்கவென்று வியர்க்கிடெனவே
    செய்நற்றவ முய்புத்திரர்க்
    கெய்திற்றிலை மெய்நற்கொடை
சிறந்திடும் வீரப்பதீரன் மக்கள்   என்றும்
மறந்திருக்கார் தர்மநாளுமிக்க (௫௯)

மருமகனென்றே மகிழ்ந்துபுகழ்ந்திடும்
மன்னன் ராமசாமிசேருவையும்
    வருமிப்புவி தனில்மிக்குள
    பெருமைத்திற மிகவுற்றிடு
மாபெருங்கங்காணியாகவுற்றே.   மாமன்
எவும்பணியினைமேவியுற்றே. (௬0)

இவ்வண்ணங்கீர்த்தி பெருகுதல்கண்டவ்வூர்
எற்றகுடிகளி னிற்சிலபேர்
    இத்தெப்பக் குளத்தைப்பொது
    வைத்துக்கொள வுற்றேயவர்
எற்றராஜாங்கத் தறிக்கையிட்டார்.   தன
வாற்றலில்லாமல் வழக்கைவிட்டார். (௬௧)

போராண்மையாற் கொண்டுவெந்தவழக்கை
புகழுறும் ராசாங்கந்தானறிந்து
புல்பூமியுங் கல்காவிரி
நில்காலமுஞ் செல்காலமாய்
போற்றும்வீரப்ப சுரேந்திரர்க்கே தெப்பம்
ஏற்றுஞ்சுதந்திரமென்றுரைத்தார். (சஉ)

இம்முறைதீர்ப்பு கைகொண்டவீரப்பனும்
ஏற்றதம்பியுடன் றன்மகிழ்ந்து
இருமைப்பலன் பெருகத்திரு
அரசுங்கண பதிவைத்திட
ஏறும்கிறுதி நிலைபிடித்தார். பலன்
கூறும்புரோகிதர் தன்கருத்தால். (சங)

உச்சியான்மந்தி விஷ்ணுவமூலத்தில்
ஓங்கும்பிரமனுறைவிருக்கும்
உற்றேகண நாதன்னருள்
பெற்றேயரசோடங்கதை
ஓங்கும்பிரதிஷ்டை செய்துகந்தார். மிகு
தீங்குகள்நீங்கத் தொழுதுவந்தார். (சச)

தங்கும்குளத்துக்கு தென்கரைபுத்தடி
தக்கபிராய்காரை மாவிலிங்கில்
சாரும்புகழ் மீறுந்திரு
வேறும்நக ராருந்துதி
ஜாதிக்கறுப்பரங்குற்றதனல் பெயர்
ஓதிக்கருப்பூரணியுரைத்தார். (சரு)

சீரானதெப்பக் குளத்துக்கு இப்பெயர்
சேராதென மூதறிஞர்களும்
செப்பும்பெய ரிப்பாரினில்
ஒப்பற்ற வீரப்பன்பெயர்
சேர்ந்துவரின் றிறமென்றுரைத்தார். இதை
யோர்ந்தேவீரகெங்கை யென்றிசைத்தார். (சசு)

தெய்வீகத்தாலுறு தெப்பகுளத்தில்
திருவீரலெக்ஷிமி தாமரையும்
சேர்ந்தங்குறல் கூர்ந்திங்கிதை
தேர்ந்தக்குளம் தோய்ந்திடில்
சென்மப்பிணிகளகன்றிடுமாம். உறு
கன்மவியாதிபறந்திடுமாம். (௪௭)

கூறும்விளம்பி வருஷத்துண்டாக்கிய
கோகுலவீரப்பன் வாவிதனில்
குலமங்கையர் தினம்வந்துமே
ஜலமாடிட வருசெய்தியை
கொண்டாடிக் கும்மியிற் கூறுதற்கு பந்து
செண்டாடுந் தன்மையைத்தேருதற்கு (௪௮)

வாருங்கடிபெண்காள் வாருங்கடி எங்கள்
மன்னன்வீரப்பன் றெப்பக்குளத்தில்
மணமிக்குள குணமஞ்சளோ
பணமிட்டதை கொணரச்செய்து
மாகெங்கையாடி யாசுசுற்றின் நமக்
கேகெங்கைநல்லயாமளிப்பாள். (௪௯)

செல்வனும்வீரப்ப தீரன்குளத்திற்
றினந்தவறாது முழுகிவரின்
தேசத்தினிலாசைக்குள
மாசற்ற மஞ்ஞையன்றிகு
தேவேந்திரன்போல் வருவாண்டி முகம்
மாசந்திரன்போ லிருவாண்டி. (௫௦)

செல்வத்தம்பியந்த நாராயணசுவாமி
செப்புந்தமயன் மொழிப்படியே
தெளிநற்சல முளவக்குள
நிறையப்படி முடிவிட்டதை
சின்னம்மார் நீவந்து பாரடியோ அதில்
அன்னங்கள் மேய்வதைத்தேரடியோ. (௫௧)

தம்பிதமயனில் ராமர் பரதரை
சாற்றுவர்களிந்த பூதலத்தோர்
தயவிற்பெரு புகழைத்தரு
ஜெயவீரப்ப துரைசொற்றவ
ரூததம்பிக்கொவ்வாதென்மதனி இது
நீதமோயில்லையோ சொல்லிதுநீ. (ருஉ)

தெப்பக்குளத்தின் பெருமைகண்டோரங்கு
சென்றுதினநீ ராடையிலே
திருவீரப்ப துரையின்குலம்
பெருநற்புதல் வோர்தம்முடன்
சேரில்லதர்மம் பெருகவென்றார். மிக்க
நூறும்வயசோ டிருப்பதென்றார். (ருங)

செல்வப்புதல்வர்கள் தம்பிக்கும் வீரப்ப
தீரர்க்குமிக்கப் பெருகியவர்
தேசத்தினில் ராசர்க்குமே
நேசத்துடன் வீசப்புகழ்
செங்கோலரசு செலுத்துமென்றார். கொடை
மங்காமலென்றும் நடத்துமென்றார். (ருச)

ஆன்றோர்சொலுநன் வரத்தாலும்முன்
அருட்டிறமுற்ற தவத்தாலும்
அளகாபுரி யுறுசெல்வனும்
உளம்நாணிட வளவோனென
அயிசுவரியம் பெருகியதே. மிக்க
யிசுவரியாக்கம் தருகியதே. (ருரு)

இப்படியென்று மிருநிதியோங்கியே
ஈடின்றியேசுக மெய்திடலும்
எனையொற்றிடு கவியிற்புகழ்
தனையுற்றிடு புலவோர்களும்
ஏற்றநிதிபெற வங்குறைந்தார். அவ
ராற்றற்குத்தக்கவை பெற்றுகந்தார். (ருசா)

தர்மத்தினால்மிகுந் தக்கபலனுக்கு
சாட்சியதாகுமிக் கும்மிதனை
தரையிற்புகழ் வினையத்தவர்
இதையுற்றுமே மனமொற்றிடத்
தானயர்வாழக் கடயார்கள். மிக்க
யானவர் செல்வந்தழையார்கள். (௫௭)

வாழியிக்கும்மி தனையுணர்ந்தோரும்
வளர்செவியேற்றுப் புகழ்ந்தோரும்.
வளமேவூரனென கிளைதாங்கிடு
மூளமேகொளுந் தளநாயக
வள்ளல்வீரப்பனும் வாழியவர் குலத்
துள்ளசகலரும் வாழியவே. (௫௮)

முற்றிற்று.